மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.07/2024
அ.வ.எண்.85/2017

அஞ்சலை ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. கிடுக்கம்பட்டியான் (எ) வடிவேலு (இறந்தவர்)
2. முருகன்
3. பானுமதி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. தமிழ்நாடு அரசு சார்பாக
   மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம், சேலம்.
5. மாவட்ட வருவாய் அலுவலர்,
   சேலம்மாவட்டம், சேலம்.
6. வட்டாட்சியர்,
   மேட்டூர் வட்டம், மேட்டூர் அணை–1.
7. சார்பதிவாளர், மேட்டூர் அணை–1. ... எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள்

இம்மனு கடந்த 13.02.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.கோகிலவாணி அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ராமசந்திரன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தன் தரப்பை முன்னிலைப்படுத்த தவறியதால் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டதாக கருதப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுவில் கண்டுள்ளவாறு அசல் வழக்கில் திருத்தங்கள் செய்ய அனுமதியளிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுவின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரரே தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் ஆவார். 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தாவா சொத்திலுள்ள மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்ததால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரரால், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. இந்நிலையில் வருவாய் துறையினர் நிபந்தனை பட்டாவை ரத்து செய்துவிட்டு, மனுதாரர் பெயரில் புதிய பட்டா வழங்கினர். இருப்பினும் தாவா சொத்திலுள்ள மனுதாரரின் சுவாதீனத்தை அங்கீகரித்து எவ்வித வருவாய்துறை ஆவணங்களையும் வருவாய்துறையில் வழங்காததால் மனுதாரர் நிலுவையிலுள்ள இவ்வழக்கை மேற்படி வருவாய்துறையினரை தரப்பினராக சேர்க்க கோரி இ.ம.எண்.02/2022 என்ற மனு தாக்கல் செய்து, மேற்படி மனு கடந்த 05.06.2024ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. ஆக மேற்படி வருவாய் துறையினர்களை வழக்குரையில் தரப்பினர்களாக சேர்த்து அவர்களுக்கெதிராக பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

(ii) அதேபோல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடநத் 20.01.2023ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியாலும், மேற்படி இறந்த 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுதாரர்கள் ஏற்கனவே இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ள நிலையிலும், இறந்த 1ம் எதிர்மனுதாரரின் பெயருக்கு பின்னர் இறந்தவர் என்ற வார்த்தையை மட்டும் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட இரு திருத்தங்களும் வழக்கு விசாரணைக்கு முன்னிட்டு செய்யப்படும் விளைவுறு திருத்தங்களாகும். மேற்படி திருத்தங்களால் வழக்கின் தன்மை மாறாது. மேற்படி திருத்தங்களால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. எனவே வழக்குரையில் உரிய

திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதிக்க கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2) 2ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு, குறிப்பாணையின் பேரில் 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) மனு பொய்யானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எந்த சொத்தும் நேரடியாக 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கிரயம் செய்து கொடுக்காத நிலையில், தாவா சொத்து தன்னுடையது என்றும், தான் அனுபவத்தில் இருப்பதற்கான எவ்வித பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை கொண்டு பரிகாரம் கேட்கவில்லை. வருவாய்துறையினரை இவ்வழக்கில் சேர்த்து வழக்குரையை திருத்த வேண்டிய அவசியமில்லை. 2017ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் தன் அனுபவத்தின் அடிப்படையில் பட்டா வழங்க வேண்டும் என பரிகாரம் கோராத மனுதாரர் தற்போது வருவாய்துறையினரை இவ்வழக்கில் சேர்ப்பதன் மூலம் தன் பெயரில் பட்டா வழங்க வேண்டுமென பரிகாரம் கோர உரிமையற்றவர்.

(ii) தாவா சொத்தானது நிபந்தனைக்குட்பட்ட பட்டா சொத்து என்பது மனுதாரருக்கு நன்கு தெரிந்திருந்தும், மேற்படி சொத்தை பொறுத்து மனுதாரரின் பெயரில் தனிப்பட்டா வழங்க இயலாது என்பதை நன்கு தெரிந்திருந்தும், வேண்டுமென்றே வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கத்தில் மேற்படி சொத்து தனக்கு பத்திரப்படி பாத்தியப்பட்டது என கூறி, வருவாய் துறையினரை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து மனுதாரர் வழக்குரையை திருத்த முயல்கிறார். மேலும் நிபந்தனைக்குட்பட்ட சொத்தை தவறாக பதிவு செய்யப்படாத கிரய ஆவணம் மூலம் பெற்றுள்ளதாக கூறி, வட்டாட்சியரால் விளக்கம் கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் பெயருக்கு தனிப்பட்டா வழங்க கோரி வருவாய்துறையினரை இவ்வழக்கில் சேர்த்து பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த இயலாது. இறந்த 1ம் எதிர்மனுதாரரை பொறுத்த திருத்தங்களை தவிர வேறு எந்த திருத்தப்பாடுகளையும் மனுதாரர் மேற்கொள்ள இயலாது. அவ்வாறிருந்தால் அவ்வழக்கின் தன்மை மாற்றிடும். எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 2, 3 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தன் தரப்பை முன்னிலைப்படுத்த தவறியதால் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டதாக கருதப்பட்டும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு:-

(i) மனுதாரர் தரப்பில் வருவாய் துறையினர் நிபந்தனை பட்டாவை ரத்து செய்துவிட்டு, மனுதாரர் பெயரில் புதிய பட்டா வழங்கினர் என்றும், இருப்பினும் தாவா சொத்திலுள்ள மனுதாரரின் சுவாதீனத்தை அங்கீகரித்து எவ்வித வருவாய்துறை ஆவணங்களையும் வருவாய்துறையில் வழங்காததால் மனுதாரர் நிலுவையிலுள்ள இவ்வழக்கை மேற்படி வருவாய்துறையினரை தரப்பினராக சேர்க்க கோரி இ.ம.எண்.02/2022 என்ற மனு தாக்கல் செய்து, மேற்படி மனு கடந்த 05.06.2024ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது என்றும், ஆக மேற்படி வருவாய் துறையினர்களை வழக்குரையில் தரப்பினர்களாக சேர்த்து அவர்களுக்கெதிராக பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த வேண்டியது அவசியமான ஒன்று என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) அதேபோல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடந்த 20.01.2023ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியாலும், மேற்படி இறந்த 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுதாரர்கள் ஏற்கனவே இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ள நிலையிலும், இறந்த 1ம் எதிர்மனுதாரரின் பெயருக்கு பின்னர் இறந்தவர் என்ற வார்த்தையை மட்டும் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது என்றும், மேற்கண்ட இரு திருத்தங்களும் வழக்கு விசாரணைக்கு முன்னிட்டு செய்யப்படும் விளைவுறு திருத்தங்கள் என்றும், மேற்படி

திருத்தங்களால் வழக்கின் தன்மை மாறாது என்றும், மேற்படி திருத்தங்களால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும், எனவே வழக்குரையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதிக்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) 2. 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சொத்தும் நேரடியாக 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கிரயம் செய்து கொடுக்காத நிலையில், தாவா சொத்து தன்னுடையது என்றும், தான் அனுபவத்தில் இருப்பதற்கான எவ்வித பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை கொண்டு பரிகாரம் கேட்கவில்லை என்றும், வருவாய்துறையினரை இவ்வழக்கில் சேர்த்து வழக்குரையை திருத்த வேண்டிய அவசியமில்லை என்றும், 2017ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் தன் அனுபவத்தின் அடிப்படையில் பட்டா வழங்க வேண்டும் என பரிகாரம் கோராத மனுதாரர் தற்போது வருவாய்துறையினரை இவ்வழக்கில் சேர்ப்பதன் மூலம் தன் பெயரில் பட்டா வழங்க வேண்டுமென பரிகாரம் கோர உரிமையற்றவர் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iv) தாவா சொத்தானது நிபந்தனைக்குட்பட்ட பட்டா சொத்து என்பது மனுதாரருக்கு நன்கு தெரிந்திருந்தும், மேற்படி சொத்தை பொறுத்து மனுதாரரின் பெயரில் தனிப்பட்டா வழங்க இயலாது என்பதை நன்கு தெரிந்திருந்தும், வேண்டுமென்றே வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கத்தில் மேற்படி சொத்து தனக்கு பத்திரப்படி பாத்தியப்பட்டது என கூறி, வருவாய் துறையினரை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து மனுதாரர் வழக்குரையை திருத்த முயல்கிறார் என்றும், மேலும் நிபந்தனைக்குட்பட்ட சொத்தை தவறாக பதிவு செய்யப்படாத கிரய ஆவணம் மூலம் பெற்றுள்ளதாக கூறி, வட்டாட்சியரால் விளக்கம் கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் பெயருக்கு தனிப்பட்டா வழங்க கோரி வருவாய்துறையினரை இவ்வழக்கில் சேர்த்து பரிகாரம் கோரி வழக்குரையை திருத்த இயலாது என்றும், இறந்த 1ம் எதிர்மனுதாரரை பொறுத்த திருத்தங்களை தவிர வேறு எந்த திருத்தப்பாடுகளையும் மனுதாரர்

மேற்கொள்ள இயலாது என்றும், அவ்வாறிருந்தால் அவ்வழக்கின் தன்மை மாற்றிடும் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(v) மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தன் தரப்பை முன்னிலைப்படுத்த தவறியதால் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டதாக கருதப்பட்டும், இவ்வழக்கு சங்கதிகளை பரிசீலனை செய்கையில், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்/வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் வருவாய்துறையினர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.02/2022 அனுமதிக்கப்பட்டதன் பேரில், வருவாய்துறையினரை தரப்பினராக சேர்த்து உரிய பரிகாரம் கோரியும், இவ்வழக்கில் தரப்பினரான 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் அவரது பெயருக்கு பின் இறந்தவர் என சேர்க்க கோரியும் வழக்குரையில் திருத்தப்பாடுகள் மேற்கொள்ள வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(vi) அதேசமயத்தில் 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தானது நிபந்தனைக்குட்பட்ட பட்டா நிலம் என தெரிந்தும், தாவா சொத்தை பொறுத்து வருவாய் துறையினரிடம் மனுதாரருக்கு தனிப்பட்டா வழங்க இயலாது என்பது தெரிந்தும், தாவா சொத்தை பொறுத்து தன் அனுபவத்தின் அடிப்படையில் மனுதாரர் பட்டா கோராமல், வருவாய்துறையினரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்ப்பதன் மூலமாக தனக்கு பட்டா வழங்க வேண்டுமென பரிகாரம் கோர உரிமையற்றவர் எனவும், மேற்படி மனுதாரர் கோரும் திருத்தப்பாடுகள் அனுமதிக்கப்பட்டால் இவ்வழக்கின் தன்மை மாறிவிடும் என்றும் எதிர்வாதம் செய்துள்ளதை கருத்தில் கொள்கையில், இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், தற்போது மனுதாரரால் கோரப்படும்

திருத்தப்பாடுகள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் இ.மஎண்.02/2022 அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் கோரப்படும் விளைவுறு திருத்தப்பாடுகள் என்பதே ஆகும்.

(vii) அதேபோல் தாவா சொத்தை பொறுத்து மனுதாரருக்குள்ள உரிமை மற்றும் தாவா சொத்தின் பேரிலான மனுதாரரின் அனுபவம் குறித்தும், இவ்வழக்கில் வருவாய்துறையினருக்கு எதிராக மனுதாரர் கோரும் பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பது குறித்தும், வழக்கு விசாரணையில் தரப்பினர்கள் முன்னிலைப்படுத்தும் சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் தான் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலும். மனுதாரர் மேற்கொள்ள கோரும் திருத்தப்பாடுகளானது இவ்வழக்கில் ஏற்கனவே மனுதாரரால் முன்னிலைப்படுத்தப்பட்ட வழக்குமூலத்திலிருந்து மாறுபடுவதாகவோ, அல்லது புதிய வழக்குமூலத்தை தோற்றுவிப்பதாகவோ இல்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேலும் 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து கோரப்படும் திருத்தப்பாடு விளைவுறு திருத்தப்பாடு என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(viii) மேலும் இவ்வழக்கில் மனுதாரர் தாவா சொத்தை பொறுத்து தனது உரிமையை விளம்புகை செய்ய பரிகாரம் கோராத நிலையிலும், தாவா சொத்தை பதிவு செய்யாத கிரய ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்று அனுபவித்து வருவதாக கூறும் நிலையிலும், தற்போது தன் பெயரில் பட்டா வழங்க கோரி வருவாய்துறையினருக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் நிலையிலும், தாவா சொத்தை பொறுத்து மனுதாரரின் உரிமை, அனுபவம் ஆகியவை குறித்து நிரூபிக்க வேண்டிய முழு நிரூபண சுமையும் மனுதாரரையே சார்ந்தது என்பதால், தற்போது மேற்படி திருத்தப்பாடுகள் மேற்கொள்வதாலேயே மேற்படி சங்கதிகள் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்பதையும் இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே சமயத்தில் மேற்படி திருத்தப்பாடுகள் குறித்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவும், அது தொடர்பாக வழக்கு விசாரணையின்போது சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவும், மனுதாரரது

வழக்கை மறுத்தளிக்கவும், 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு உரிய வாய்ப்பு வழங்கப்படும் என்பதை கருத்தில் கொள்கையில், இம்மனுவை அனுமதிப்பதால், எதிர்மனுதாரர்களின் எதிர்வாதத்திற்கு எவ்வித குந்தகமும் எழாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் இம்மனுவை செலவுத்தொகையின்றி அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.06 11:04:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.06 11:04:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.